# வாய்மொழி இலக்கியம்

(நாட்டுப் பாடல்கள்)

யாழ்ப்பாணப் பிரதேசக் கலைமன்றம்.

நாட்டுப்பாடல் நடன நாடகக்குழு

வெளியீடு

சார்வரி; தைப்பூசம்

(31—1—61)

முதற்பதிப்பு தை 1961

விலை ரூபா 1-00

சைவப்பிரகாச அச்சகம்
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்
பிரதேசக் கலைமன்றத் தலைவரும்
**யாழ்ப்பாண அதிபதியுமாகிய**
**திரு. ம. ஸ்ரீகாந்தா C. C. S., O. B. E.**
**அவர்கள் அளித்த**

# ஆசியுரை

கலைகளின் வளர்ச்சியிலேதான் ஒருநாட்டின் நிரந்தரமான வளர்ச்சியைக் காணமுடியும். சொல்வளம் பொருள் வளம் உணர்ச்சி நிறைவு சிறந்து விளங்கும் நாட்டுப்பாடல்களும் நாட்டுக் கூத்துக்களும் எமது மூதாதையர் எமக்களித்துச் சென்ற பழந்தமிழ்ச் செல்வங்கள். ஆனால் இவைகளுட்பல அழிந்து சிதைந்துவிட்டன. இன்னும் மறைந்து வருகின்ற இந்த வாய்மொழி இலக்கியச் செல்வத்தைப் பேணிப் பாதுகாத்து நடப்பது நமது கடன்.

பிரதேசக் கலைமன்றத்தின் ஒரு பிரிவாகிய நாட்டுப்பாடல் நடன நாடகக்குழு இப்பெருங் கலைப்பணியைத் திறம்படச்செய்து நாட்டுப்பாடல்களை அச்சுவாகனம் ஏற்றியமை குறித்து பெருமகிழ்வடைகின்றேன். அத்தாபனத்தாருக்கு என் நல்லாசியுரிமையாகுக.

இவர்களது முதல் வெளியீடாகிய **"வாய்மொழி இலக்கியம்"** என்னும் பிரசுரம் நாடெங்கும் பரவவேண்டுமென்று வாழ்த்துகிறேன். இவர்களது கலைப்பணி இன்னும் முன்னேறுவதற்கு தமிழ்மக்களின் ஒத்துழைப்புத் தேவை. கிராமங்களிற் கிடந்து புதைந்துவரும் இத்தகைய நாடோடிப் பாடல்களைச் சேகரித்துதவினால் இக்குழு இதைத் தொடர்ந்து இன்னும் பல பிரசுரங்கள் வெளியிட வாய்ப்பாகும்.

தமிழ்க் கலைகள் வாழ்க! தமிழன்னை வாழ்க!! தமிழர் வாழ்வு வளம்பெற் றுயர்க!!!

யாழ்ப்பாணம்,
5-1-61.

ம. ஸ்ரீகாந்தா

# வாய்மொழி இலக்கியத்துக்கு வாழ்த்து

இசைப்புலவர் சி. செல்லத்துரை

பாவலரும் பண்டிதரும் பாடிப் போற்றும்
பான்மைதனிற் பாமரரின் உள்ளத் தூறி
நாவினுக்கும் மனத்தினுக்கு மின்ப மூட்டும்
நாட்டுப்பா டல்கொடுக்கும் நயம்போ லுண்டோ
மேவுநகை யுணர்ச்சிதுயர் வீரங் காதல்
வியப்புடன்பே ரச்சமிவை காணும் மக்கள்
தாமுரைத்த உணர்ச்சியுள்ள கவிதை யாவும்
தமிழணங்கை வாழ்விக்கும் ஆக்க மன்றோ! 1

பாமரரின் கவிதைகளின் பண்பு கேண்மின்!
படித்துவக்குஞ் செய்யுணயம் பாங்கா யுண்டு
தேமதுர ஓசைநயஞ் செய்யுட் கான
செப்புநவ ரசவுணர்ச்சிச் சிறப்பு முண்டு
பூமணத்திற் சிறந்தமணம் இயல்பா யுண்டு
புகலுகின்ற சொல்லிலுயிர்ப் பொலிவு முண்டு
நாமவற்றை நன்கறியத் தேடி யீந்த
நாட்டுப்பா டற்குழுவை வாழ்த்து வோமே! 2

வயலருவி வெட்டுகின்றோர் துலாமி திப்போர்
வாரிதியிற் கப்பல்களை ஓட்டு கின்றோர்
செயலரிய கடும்பணிகள் செய்வோர் தங்கள்
செய்தொழிலி லெழுமுணர்ச்சித் திறத்தி னாலே
நயமொளிரப் பாடிவரும் பாட லோடு
நாரியரின் தாலாட்டும் இறந்தோர் மீது
துயரொழுக அழவருமொப் பாரிப் பாட்டும்
துலங்கிவரு நூலினிது போற்று வோமே. 3

———

# முன்னுரை

ஒரு தேசத்தின் பண்பும் கலாச்சாரமும் நாகரிகமும் அத்தேச மக்களின் ஆடல்பாடற் கலைகள்மூலம் விளங்குகின்றன. இன்று நாகரிக முன்னேற்றமடைந்துள்ள மேனாட்டார் கற்கால வாழ்வு வாழ்ந்தபோது தமிழர் உயர்ந்த வாழ்வின் உச்சியில் இருந்தனரென்று கரப்பா, மொகஞ்சதரோ ஆராய்ச்சிகள் கூறுவது யாவருமறிந்தது. வீணைக்கொடி எழுதி வாழ்ந்த இசைக்கலைஞன் இராவணனும் இதற்கோர் சான்றெனலாம்.

இவ்வாறு பழைமைசான்ற தமிழர் வாழ்வில் எழுந்த கலைகள் பல மறைந்தொழிந்ததுபோல அக்காலத்துக் கிராமக் கவிக்குயில்கள் இயற்றிப் பாடிவந்த தேன்சொட்டும் தீந்தமிழ் இலக்கியப் பாடல்களும் மெல்ல மெல்ல மறைந்து வருகின்றன.

அருவிவெட்டிலே, ஏற்றமிறைப்பிலே, கப்பல் ஓட்டிலே வழிநடைகளிலே. ஊருணிகளிலே, சந்திகளிலே, திருமண வீட்டிலே, மரண காலங்களிலே, சாதாரண மக்களின் வாயிலிருந்து இச்செந்தமிழ்ப் பாடல்கள் சுயமாக எழுந்தன. கன்ன பரம்பரையாக நிலைத்தன. அதனாற்றான் பழந்தமிழ் வாழ்வை விளக்கவந்த நாமக்கல் இராமலிங்கனாரும்,

> "தமிழன் என்றொரு இனமுண்டு
> தனியே அவற்கொரு குணமுண்டு
> அமிழ்தம் அவனுடை மொழியாகும்"

என்று தமிழனையும் அவனது மொழியையும்பற்றிக் கூறிவிட்டு,

> "உழவும் தொழிலும் இசைபாடும்
> உண்மை சரித்திரம் அசைபோடும்
> இழவில் அழுதிடும் பெண்கூட
> இசையோ டழுவது கண்கூடு"

என்று இந்தப் பண்டைத் தமிழ்ச் செல்வமாகிய நாடோடி இலக்கியத்தின் சிறப்பினை விளக்கினார். இலக்கிய நயமும் நகைச்சுவையும் விவேக ஞானமுங் கலந்த இந்த நாடோடி இலக்கியக் கருவூலங்களைக் காலவெள்ளத்திலே அமிழ்ந்து

போகாது பேணிக் காத்து வைத்தல் பெருந்தேசத் தொண்டாகும்.

யாழ்ப்பாணப் பிரதேசக்கலை மன்றத்தின் "நாட்டுப் பாடல் நடன நாடகக்குழு" இந்நாட்டுப் பாடல்களைப் புத்தக உருவில் ஆக்க முயன்றபோது கலாச்சார அமைச்சுப்பகுதி நிதியுதவி இம்முயற்சியை முற்றுப்பெறச் செய்தது. அரசினர்க்கெம்நன்றியுரியது. நாட்டில் உள்ள அன்பர்கள் பலர் தத்தம் பகுதிகளிலிருந்து பல பாடல்களைச் சேகரித்தெமக்குதவினர், சிறப்பாக நாடோடி இலக்கிய நயமும் தரமுமுணர்ந்த கலைஞர் மு. இராமலிங்கம் அவர்கள் பல பாடல்களை எமக்குதவியது மாத்திரமன்றி இப்பாடல்களைப் பரிசீலனை செய்தும் ஒழுங்குமுறை செய்தும் தந்தார்கள். இக்கலைஞரின் நாடோடி இலக்கியப் பெரும்பணியை மதித்து அண்மையில் நிகழ்ந்த யாழ்பிரதேசக் கலைமன்றத்தின் கலைவிழாவிலே அவருக்குப் பொன்னுடை போர்த்துக் கௌரவித்தமையும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. இத்தகைய கலைஞரின் ஆலோசனை பெற்று இந் நூலினை வெளியிடுவது குறித்துப் பெருமையுறுகிறோம். கலைஞர் இராமலிங்கம் அவர்களுக்கும் பாடல்கள் தொகுத்துதவிய அன்பர்களுக்கும் எம்நன்றியுரியது,

இப்பாடல்களிற் பல செல்அரித்துச் சிதைந்த ஏடுகளிலிருந்து வந்தவை, பிழைகள் பல இருக்கக்கூடும். அவற்றைக்குறித்தனுப்பினுல் அடுத்த வெளியீட்டிற் சேர்க்கலாம்.

தமிழ்க்கலைகள் புத்துயிர்பெற்று வரும் இந்நாட்களில் கலையார்வம் கொண்ட தமிழ்ப்பெருமக்கள் இந்நூலை ஏற்று நாட்டின் பல பகுதிகளிலும் புதையுண்டுவரும் இத்தகைய நாட்டுபாடல்களைத் தேடிஎடுத்து எமக்கனுப்பி இப்பணியினை மேலும் ஆதரிக்கவேண்டுமென்று வேண்டுகின்ரேம்.

**இ. பொ. இராசையா**
தலைவர்
நாட்டுப்பாடல் நடன
நாடகக்குழு
யாழ். பிரதேசக் கலைமன்றம்

195, கே, கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்
31—1—61.

# PRADESHA KALAI MANRAM, JAFFNA

Patron: (Ex-Officio)

**The Hon'ble Mr. Maitripala Senanayake,**

(Minister of Industries. Home & Cultural Affairs)

President: (Ex-Officio)

**M. Sri Khanta, Esq., O. B. E.; C. C. S,**

(Govt. Agent, Jaffna Dt.)

Vice-President: (Ex-Officio)

**T. S. Durairajah, Esq., J. P.**

(Mayor of Jaffna)

Hon. General Secretary:

**Kalaipulavar K. Navaratnam,** Vannarponnai, Jaffna

Hon. Assistant Secretary:

**S. Satialingam, Esg.** Nallur, Jaffna

Hon. Treasurer:

**T. Balasanthiran, Esq.,** D. R. O., Jaffna.

# Office-Bearers

of

## The Standing Committee for Folk Songs, Folk Dance and Drama

Chairman:

Muhandiram E. P. Rasiah, J. P., S. B. St. J.
Vannarponnai, Jaffna

Vice-Chairmen:

Mr. K. P. Muttiah, Editor "Samooka Thondan", Chundikuli

Mr. T. Thangarajah, Art Master, Uduvil

Joint Secretaries:

Mr. V. C. Chanmugam, Investigating Officer
Local Govt. Dept. Jaffna.

Mr. S. Paranjothi, Investigating Officer,
Local Govt. Dept. Jaffna.

Hony. Treasurer:

Mrs. Pearl. Attanasiar, President W R. D. S., Sillalai

Committee Members:

Mr. C. Kanagasabai, B. A., Dip. in Education,
Central School, Velanai

Isaipulavar C. Selladurai, Kodikamam

Mr. E. Mahadeva, Teacher, Hindu College, Jaffna

Mr. W. N. Thevakadadcham, Jaffna College,
Vaddukoddai

Mr. T. Ponnampalam, Music Teacher,
Jaffna College, Vaddukoddai

Mrs. Ruthra Kandasamy, President W. R. D. S.
Mathagal.

Mr. Ed. Navaratnasingam, Principal
Govt. College, Delft.

# Past and Present of Folk Songs

"From times of remote antiquity to which our Tamil literature extends, folk-lore lyrics have occupied a unique place. 'Tholkappiam' our ancient Tamil Grammar, which may be safely ascribed to at least half a millennium before Christ, gives such lyrics a place among the species of compositions known to Tamil poetry. – It, therefore goes without saying, that folk-lore pieces formed an integral part of tamil literary productions even before the age of Tholkappiam. The earliest specimens of folk-lore compositions are to be found in Silappathikaram, the most ancient indigenous Tamil epic-work worth its name.—this marvellous epic is a mirror reflecting the whole Tamil national life and culture of that time." So has stated a Tamil scholar.

Fearing that some of these ancient Folk-songs and folk-lore were in the brink of extinction, the Jaffna Pradesha Kalai Manram instituted a Standing Committee for Folk songs, Folk Dance and Drama and allotted it the task of inter alia:—

(a) resucitating our ancient Folk dances and Drama.

(b) and salvaging the Folk songs and Folk lore.

This Committee, after an year's spade-work, has pleasure in presenting this Booklet called "Vai Moli Lakkiam" containing the first fruits of its labours.

## Search

Although we advertised in the "Virakesari" "Eelanadu" and distributed a large number of handbills inviting the members of the public to send us, any folk-songs in their possession, yet the response was poor. The members of our Committee, therefore, had to make personal endeavours, scour the country, contact friends and collect these. A scholarly sub-committee examined the collections at several sittings, sifted the grain from the chaff, and then forwarded them to Mr. M. Ramalingam, our Gold Medalist. He, as an acknowledged authority in the evaluation of Folk songs, was good enough to scrutinise, select and set his seal of approbation on these, as suitable for publication and also to give us some of his precious "finds" for inclusion in this.

## Amateur Talents

With the establishment of the Jaffna Pradesha Kalai Manram, began the search for the cultural soul of Yalpanam, reputed to be a land won by

the ministrel Yalpadi. It was found to throb not so much in the classical arts and music, as in the folk heritage found in the rural areas.

If Freedom meant, inter alia, an opportunity to rural folks to exhibit their talents, a most poignant recognition of the principle came about on 20th October last, when the music festival or Kalai Vila organised by the Jaffna Pradesha Kalai Manram, was celebrated at the Jaffna Central College. Instead of the monopoly of professional talents to embellish such an occasion, amateur gems from the untapped regions of Jaffna came over and presented a rich variety of their ancient heritage—a pageant of folk dances, folk dramas with folk songs etc.

And when one by one, the items were presented before an assembly of distinguished visitors, opposite the improvised platform and later in the Open air theatre, the beauty of our ancient culture and the inherent talents of our amateur artistes came to light. The Pageant-on-wheels, an experiment in staging the folk dances and dramas to a city audience, proved a success, judging from the unprecedented large crowds that flocked in and witnessed them. The pageant proved a joy to the eye and the music a pleasure to the ear. It was more—the discovery of a priceless legacy of dance and songs. A legacy that had its roots in the 'joi de vivre' of a people, spontaneous in their gaiety, unspoilt

by the trammels of the so called civilisation and who had lived in close communion with Nature.

## Folk Heritage

The festival also depicted the various other activities in which the Manram was interested. The Folk songs, Kavady, Kolattam etc. will never go out of date, but keep step with time appearing new and vital to each succeeding generation, becoming a definite, if not a personal part of the life of every lover of art and music. Folk songs and dances were rooted in age-old national tradition. Their optimism and strong affinity to the people of old, never failed to arouse a deep emotional response from lovers of folk lore and folk songs of today. They not only gave the insight into the early socio-cultural life of the region, but also revealed to us the simple, yet lively and realistic literature of those times.

The miming gestures, the rythm, beautiful movements and melodious but bold singing and dialogues all showed their unique pattern. In their style and richness, they can be compared with the great lyrics and dances of any age—some of them, certainly, far surpassed the modern compositions in technique, fluency and boldness.

## Publication No. 1

This Booklet, the first of our publications, containing a varied assortment of folk songs,

should widen the horizon of our folk heritage. Thanks to the financial backing of the Cultural Department, we are able to bequeath to posterity a reorientated version of our ancient culture, intact in all its reality, beauty and truth. It is hoped that this publication will be found interesting, informative and instructive.

May we look up to the members of the public, admirers of art and music and lovers of folk songs to help us to continue this cultural service, by sending us materials in their possession for our next publication in the early part of 1962.

**E. P. Rasiah,**
Chairman
Standing Committee for
Folk Songs, Folk Dance & Drama.

Jaffna,
31-1-61.

## WHICH ARE YOU?

An Arabian proverb divides humanity into four categories:—

"He that knows and knows that he
knows is wise—**hear him,**

He that knows and knows not that
he knows is asleep—**wake him;**

He that knows not and knows not that
he knows not is a fool—**shun him;**

He that knows not and knows that
he knows not is docile—**teach him.**"

# யாழ்ப்பாண பிரதேசக் கலைமன்றம்

போஷகர்:— (கௌரவ நிர்வாகஸ்தர்)
கௌரவ மைத்திரிபாலா செனநாயக்கா, அவர்கள்
உள்நாட்டலுவல், கைத்தொழில் கலாச்சார மந்திரி

தலைவர்:— (கௌரவ நிர்வாகஸ்தர்)
திரு: ம. ஸ்ரீகாந்தா அவர்கள் C. C. S., O. B. E.
அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.

உபதலைவர்:— யாழ்ப்பாண மாநகராதிபதி

பொதுச்செயலாளர்:—கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள்
வண்மேற்கு, யாழ்ப்பாணம்.

உதவிச் செயலாளர்:— சு. சத்தியலிங்கம் அவர்கள்
நல்லூர். யாழ்ப்பாணம்.

பொருளாளர்;— ரி. பாலச்சந்திரன் அவர்கள்
காரியாதிகாரி, யாழ்ப்பாணம்.

✱

## நாட்டுப்பாடல், நடன, நாடகக் குழுவின் உத்தியோகத்தர்கள்

தலைவர்;— முகாந்திரம் இ. பொ. இராசையா அவர்கள்
J.P., S. B. St. J., வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

உப தலைவர்கள்:— திரு. க. பே. முத்தையா அவர்கள்
ஆசிரியர், ''சமூகத்தொண்டன்'' சுண்டிக்குளி.

திரு, ரி. தங்கராசா அவர்கள்
சித்திர ஆசிரியர் உடுவில்.

—(தொடர்ச்சி XVI.)

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | கண்டீரோ கண்மணியை | ... | 1 |
| 2 | என்செய்வாய் பெண்பனையே | ... | 2 |
| 3 | திருக்கைக் கலியாணம் | ... | 3 |
| 4 | சீலாக் கலியாணம் | ... | 5 |
| 5 | உடையார் உடைந்தார் | ... | 7 |
| 6 | அவல் இடித்தல் | ... | 9 |
| 7 | பறங்கியர் காலத்துப் பாடல்கள் | ... | 10 |
| 8 | காகமுந் தாகமும் | ... | 13 |
| 9 | காகமும் சகுனமும் | ... | 14 |
| 10 | காகத் தூது | ... | 15 |
| 11 | பட்சிகளை வினவுதல் | ... | 16 |
| 12 | பிரிவாற்றுமை | ... | 17 |
| 13 | துணை தேடுதல் | ... | 18 |
| 14 | பிறந்த அகம் போன பெண் | ... | 19 |
| 15 | மைத்துனன் மைத்துனி மணம் | ... | 20 |
| 16 | புத்தி அறிதல் | ... | 21 |
| 17 | யானையின் அட்டூழியம் | ... | 22 |
| 18 | எண்ணெய்ச் சிந்து | ... | 24 |
| 19 | கப்பற் பாட்டு | ... | 31 |
| 20 | ஒரு கூட்டம் ஆண்களும் பெண்களும் | ... | 33 |
| 21 | ஒப்பாரி | ... | 38 |
| 22 | கொடும்பாவி இழுத்தல் | ... | 40 |
| 23 | அருவிவெட்டுப் பாடல் | ... | 42 |

(XIV-ம் பக்கத் தொடர்ச்சி)

இணைச் செயலாளர்கள்:—திரு. வி. சி. சண்முகம் அவர்கள்
உள்ளூராட்சி விசாரணையாளர், யாழ்ப்பாணம்.

திரு. சு. பரஞ்சோதி அவர்கள்
உள்ளூராட்சி விசாரணையாளர், யாழ்ப்பாணம்.

பொருளாளர்:—திருமதி. பேர்ள் அத்தனுசியார் அவர்கள்
தலைவி மாதர் மு. சங்கம் சில்லாலை.

★

**அங்கத்தினர்**

1 திரு. சி. கனகசபை அவர்கள் B. A., Dip. in Ed.
அரசினர் மத்தியகல்லூரி, வேலணை.

2 இசைப்புலவர் சி. செல்லத்துரை அவர்கள் கொடிகாமம்

3 திரு. இ. மகாதேவா அவர்கள்,
ஆசிரியர், இந்துக்கல்லூரி வண்ணார்பண்ணை.

4 திரு. எட்வேட் நவரத்தினசிங்கம் அவர்கள்
அதிபர், மத்தியகல்லூரி நெடுந்தீவு.

5 திரு. உ. ந. தேவகடாட்சம் அவர்கள்
ஆசிரியர் யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை.

6 திரு. தா. பொன்னம்பலம் அவர்கள்
சங்கீத ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை.

7 திருமதி. உருத்திரா கந்தசாமி அவர்கள்
தலைவி மாதர் மு. சங்கம் மாதகல்

# 1 கண்டீரோ கண்மணியை

காதலுடன் சென்ற கன்னி ஒருத்தியைக் கண்டீரோ,
என்று கேட்கிருள் செவிலித்தாய்.

1 கிண்ணிபோல் சந்திரரும்,
கிழக்கே பார்த்த சூரியரும்,
பாதிமருக் கொழுந்தைப்
பாதையிலே பார்த்தீங்களா?

2 சிட்டுப்போல நடையழகி,
சிறுகுருவித் தலையழகி,
பட்டுப்போல் மேனியாளைப்
பாதையிலே பார்த்தீங்களா?

3 கோரை மயிரழகி,
குருவிரத்தப் பொட்டழகி,
பவளம்போல் பல்லழகி,
பாதையிலே பார்த்தீங்களா?

4 பட்டம்போல் நெற்றி,
பவளம்போல் வாயழகி
முத்துப்போல் பல்லழகி,
முன்னேபோகக் கண்டீரோ?

5 வாகை மரமேறி
வடக்கேதெற்கே பார்க்கும்போது,
தோகை மயில்போலே
தோகையளைக் கண்டீரோ?

[இப்பாடல் தந்தவர் வெள்ளவத்தை மு. இராமலிங்கம் அவர்கள்].

# 2 என் செய்வாய் பெண் பனையே

**கள்ளுக் குடித்து வெறிகொண்ட ஒருவன் ஒரு வடலியின்கீழ்நின்று அதனை வினவுகிறான்.**

குடியனின் வினு

வழிக்கரையே நிற்குமந்த
வடலிமரப் பெண்பனையே!

வாறவர்க்கும் போறவர்க்கும்
என்செய்வாய் பெண்பனையே?

வடலியின் விடை

இருக்கத் தடுக்காவேன்
இட்டிருக்கப் பாயாவேன்;

கொழிக்கநல்ல தங்கையர்க்கு
கொழிசுளகு நாருவேன்;

புடைக்கநல்ல தங்கையர்க்கு
புடைசுளகு நாருவேன்;

படிக்கநல்ல தம்பியர்க்கு
பட்டோலை நாருவேன்;

எழுதநல்ல தம்பியர்க்கு
எழுத்தோலை நாருவேன்;

தூரத்து வன்னிமைக்கு
தூதோலை நாருவேன்

வாசலில் வன்னிமைக்கு
வழக்கோலை நாருவேன்.

**குறிப்புரை:** வன்னிமை - தலைமைக்காரன்; தூதோலை - செய்தி அனுப்பும் பத்திரம்; வழக்கோலை - முறையீட்டுப் பத்திரம்.

[இப்பாடலை உதவியவர் வட்டுக்கோட்டை, திருமதி வைத்தியலிங்கம் நாகரத்தினம் அம்மையார் அவர்கள்]

# 3 திருக்கைக் கலியாணம்

அஃறிணைப் பொருள்களுக்குக் கல்யாணஞ் செய்து வைத்தல் சிறுவர் மரபும் வளர்ந்தவர் மரபுந்தாம். மக்கள் தம்வழக்கத்தை வாய்பேசாத அஃறிணைப் பொருள்களுக்கும் ஏற்றிக் கூறுவர். இது நெய்தல்நிலப் பாடல்.

*கட்டுத் திருக்கைக்குக்*
*கல்யாணம் என்றுசொல்லி,*

*கயல்மீன்கள் எல்லாம்*
*குமர்பேசிப் பெண்பேசி,*

*ஆக்கி எடுத்து*
*அயிரைமீன் கொண்டுவர,*

*பாயுந் தலைகணியும்*
*பாலோராக் கொண்டுவர,*

*கிண்ணியும் சந்தனமும்*
*கிழக்கனோராக் கொண்டுவர,*

*மணலைகள் எல்லாம்*
*மத்தளந் தட்டிவர*

*சல்லித் திரளியெல்லாம்*
*சங்குகள் ஊதிவர,*

*நகரைகள் எல்லாம்*
*நாகசின்னம் வாசித்துவர*

*நாறல் கிளாத்தியெல்லாம்*
*நான்தோழி என்றுவர,*

தூங்கல் கிளாத்தியெல்லாம்
துரிதமா யோடிவர,

குட்டுறு வந்து
குடியைக் கெடுத்ததுவே.

குண்டேறு என்னும் மீனின்பெயர் குட்டுறு என்று விகாரப் பட்டது. மற்றை மீன்களைக் குட்டிக் கலக்கக்கூடிய கொம்பு குட்டேற்றுக்கு உண்டென்பர்.

[இப்பாடலைச் சேகரித்து உதவியவர் நாரந்தனை அன்பர் N. அந்தோனிப்பிள்ளை அவர்கள்]

நாட்டுப்பாடல் பற்றி ... ...

"மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதி லூறிடுந்தேன் வாரியிலும்
ஏற்றநீர்ப் பாட்டி னிசையினிலும் நெல்லிடிக்கும்
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சு மொழியினிலும்
சுண்ண மிடிப்பார்தஞ் சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுவோர் கூட்டமுதப் பாட்டினிலும்"

... ... என்று பாரதியார் பாடுகின்றார்.

# 4 சீலாக் கலியாணம்

இதுவும் நெய்தல்நிலப் பாடல்

கயல்மீனர் கண்டிப்புடன்
கல்யாணம் பேசிடவே;

முரல்மீனர் முன்னின்று
முழுவதையும் முற்றுக்க;

ஒட்டியும் ஓராவும்
ஒதுங்கிநின்று மாவிடிக்க;

சூடை சூடாய்ப்
பணியாரம் பண்ணிவைக்க;

பாலையும் பாரையும்
பலமாய்ப் பந்தல்கட்ட;

சள்ளைமீன் சடுதியாய்ச்
சந்தனங் கொடுத்துதவ;

வெற்றிலையுந் தட்டமும்
விளைமீனர் கொண்டுவர;

மணலை மகிழ்ச்சியாய்
மாப்பிள்ளையை அழைத்துவர;

எறியால் எறிவெடியுடன்
எழுந்து நின்றிடவே;

திரளி திடுக்கிட்டுத்
திரும்பி ஓடிடவே;

நெத்தலி நெருங்கிநின்று
நன்ருய் இடங்கொடுக்க;

அயிரை ஐயராய்
அருகில் நின்றிடவே;

சேதி பெண்ணைச்
சேடியாய் அழைத்துவர;

மண்ணு மகிழ்வுடன்
மந்திரம் ஓதிடவே;

சீலா சிரிப்புடன்
காலா கழுத்திலே;

மாலை இட்டான்
மனம் மகிழ்ந்திடவே;

[ இச்செல்வத்தை எழுதியுதவியவர் திருக்கோணமலை அர்ச். மேரி கல்லூரி, செல்வி இந்திரவதி கந்தையா என்னும் மாணவி ஆவர் ]

**"நாக்கிசை பயின்று யாப்பில்**
**தகுமொழி உருவிற்பூத்துத்**
**தேக்கரும் அருளின் மாண்பு**
**மணப்பதே செய்யுள்"**

என்பதற் கிணங்க உள்ளத்திற் ருேன்றும் தடுத்தற் கரிய உணர்ச்சி சொல்லுருவம்பெற்று எதுகை மோனையுடன் நாக்கிசை பயின்று பிரவாகித்ததே நாட்டுப்பாடல் ஆகும்.

# 5 உடையார் உடைந்தார்

ஒரு மாதமாக மாடுகளைப் பராமரிக்க ஒருவன் இல்லாமல் உடையாரும் அவர் மனைவியும் திண்டாடினார்கள். அன்றுதான் பொடியன் ஒருவன் வந்து மாடு பராமரிப்பேன் என்றான்.

அன்றிரவு அவனுக்கு உணவளித்துக்கொண் டிருந்தாள் உடையார் மனையாள். கொஞ்சத் தூரத்திலே ஒரு வாங்கி யில் இருந்தார் உடையார். கொடுக்கக் கொடுக்க உண்டு கொண்டே இருந்தான் இடையன். இப்படி உண்டுகொண்டு போவானாயின் அவன் உழைப்பு அவனுக்கு உணவிடவே போதாதென உணர்ந்தார் உடையார். தன் மனைவியை எச் சரிக்கை பேச விரும்பி,

*மட்டுக்கு மட்டு டையோ டையோ*

என்றார் உடையார்.

உடையார் சொன்னது அவர் மனைவிக்கு விளங்கிவிட் டது. இருந்தாலும் பொடியன் தங்களுடன் அணைவாகும் வரையில் வயிறுமுட்ட உண்ணக் கொடுப்போம். அதன் பின் மட்டு மட்டாக உணவளிக்கலாம் என்னுங் கருத்துடை யவள் உடையார் மனைவி. அவள் உடையாரை அடக்கும் நோக்கமாக,

*மருவு மட்டும் டையோ டையோ*

என்று பதிலிறுத்தாள்.

உடையாரின் எச்சரிக்கையும் அவர் மனைவியின் பதிலும் பொடியனுக்கு விளங்கிவிட்டது. போதிய உணவு தனக்குத் தினமும் கொடாவிட்டால் தான் மறுநாள் காலையே ஓடிவிடுவ தாக அச்சுறுத்த எண்ணி,

கட்டின மாடு கட்டை யோடே
காலைத் தாலைக்கு டையோ டையோ

என்றான் பொடியன். உடையாருக்கும் மனைவிக்கும் அவன் சொன்னது புரிந்துவிட்டது.

டையோ என்பது ஒருவரோ டொருவர் கருத்து மாறுபட்டு நிற்றலை உணர்த்துங் குறிப்புச்சொல். உடையார், உடையார் மனைவி, இடையன் மூவரும் கருத்து ஒத்து நில்லாமையால் மூவருமே டையோ டையோ என்றனர். ஒருமுறை சொல்லாது இருமுறை சொல்லியது கத்தம் துணிபு உணர்த்துவதற்காகவாம். இன்றும் இவ்வரலாற்றை நினைவூட்டவும் தந்தொழிலுக்குப் பெருமையுறவும்,

மட்டுக்கு மட்டு டையோ டையோ
மருவு மட்டும் டையோ டையோ
கட்டின மாடு கட்டை யோடே
காலைத் தாலைக்கு டையோ டையோ

என்று மாடுமேய்க்கும் பொடியன்கள் பாடி யாடி வருகின்றார்கள்.

[ இப்பாடலை உதவியவர் வெள்ளவத்தை, இராசசிங்க வீதி, நண்பர் திரு. M. A. நடராஜா அவர்களாவர் ]

நாட்டுப் பாடல்களை ... ...

கல்லாதார் கலைகள், எழுத்தறியா இலக்கியம், மக்கள் இலக்கியம், கிராமியக்கவிகள், பழந்தமிழ்ச்செல்வம், புதையுண்ட இலக்கியக்கருவூலம் வாய்மொழி இலக்கியம் ...

... ... என்று பலபடக் கூறுவர்.

# 6 அவல் இடித்தல்

நெல்லை அவலாக்கும் விதம்
இப்பாடலிற் சொல்லப்படுகின்றது

*அன்னம்மாளின் வீட்டுக்குப் போனேன்*
*அங்கே கண்ட அதிசயங்கேள்.*

*உலையிற் போட்டாள் பொன்னம்மாள்*
*உள்ளம் புழுங்கினள் அன்னம்மாள்.*

*கூடையில் எடுத்தாள் பொன்னம்மாள்*
*குமுறி அழுதாள் அன்னம்மாள்.*

*சட்டியில் தெளித்தாள் பொன்னம்மாள்*
*சத்தம் போட்டாள் அன்னம்மாள்.*

*பதறிக் குதித்தாள் பொன்னம்மாள்*
*பல்லை இளித்தாள் அன்னம்மாள்.*

பொன்னம்மாள் அன்னம்மாள் என்று நெல் பெண்ணாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. நெல்மணி பெண்மணி. நெல்லை இலக்குமி என்று இன்றும் சொல்வார்கள். உள்ளம் புழுங்குதல் மகளிர்க்குச் சொல்லுங்கால் மனம் வருந்துதல், நெல்லுக்கு:- உள்ளிருக்கும் அரிசி வேகுதல். பல்லை இளித்தல் உமிநீங்கி உள்மணி துலங்குதல். இது சிலேடையணி.

அவித்து, கடகத்தில் கொட்டி, நீர்வடித்து, சட்டியில் இட்டு உலர்த்தி, உரலில் இட்டு உமிபோக்கி வருவதே அவல்.

[இப்பாடலைத் தந்துதவியவர் தலையாளி அன்பர் திரு. வ. கந்தையா அவர்கள்.]

# 7 பறங்கியர் காலத்துப் பாடல்கள்

யாழ்ப்பாணத்தைப் பறங்கியர் ஆண்டது நாற்ப தாண்டு வரையுள்ள சிறிய காலமாயினும், அவர்களின் பழக்கமும் வழக்கமும் பாஷையும் பரம்பரையும் இன்றும் யாழ்ப்பாணத்தில் வேரூன்றி நிற்கின்றன. சிலபாடல்கள்!

1 தூரா தூரத்திலே—பறங்கி
துப்பட்டி விற்குதடா;
துப்பட்டி வாங்கித்தாடா—பறங்கி
தோளுக்கு மட்டம்பார்த்து.

2 துலுக்கன் சந்தையிலே—பறங்கி
உலக்கை விற்குதடா;
உலக்கை வாங்கித்தாடா—பறங்கி
குலுக்கி மாவிடிக்க.

3 காலா காலத்திலே—பறங்கி
காலாழி விற்குதடா;
காலாழி வாங்கித்தாடா—பறங்கி
காலிலே போட்டுக்கொள்ள.

* * * *

4 சுண்ணாகச் சந்தையிலே—பறங்கியர்
சுங்கானைப் போட்டுவிட்டார்;
பார்த்து எடுத்தவர்க்குப்—பறங்கியர்
பாதிச் சுங்கான் கொடுப்பார்.

* * * *

5 முந்திரிச் சாராயம்—பறங்கிக்கு
முந்நூறு கோழிமுட்டை
நித்தங் கிடையாமல்—பறங்கிக்கு
சித்தந் தடுமாற்றம்.

6 மாட்டு இறைச்சியாம்—பறங்கிக்கு
மானும் இணங்காதாம்;
சுட்ட கருவாடாம்—பறங்கிக்கு
சோறும் இணங்காதாம்.

* * * *

7 சிங்கிலிநோனு சிங்கிலிநோனு
சீப்புக் கொண்டைக்காரி,
பார்த்தபேர்கள் ஆசைப்படும்
பந்துக் கொண்டைக்காரி.

* * * *

8 காடை கௌதாரி மைனு
வாங்கலையோ ஆயாளு?
கட்டிப் போட்டுத் தீனைப்போட்டால்
முட்டைபோடும் ஆயாளு.

9 சிறுக்கிதைக்கிற சின்னஊசி
வாங்கலையோ ஆயாளு?
பிச்சுத்தைத்து மேலேபோட்டால்
நல்லாயிருக்கும் ஆயாளு.

* * * *

10 பனை கறுத்திருக்கும்,
பனைமட்டை சிவந்திருக்கும்,
அதற்குள்ளிருக்குந் தண்ணீரைக்குடித்தால்
தலை கிறுகிறுக்கும்.

* * * *

11 என்னபிடிக்கிறாய் அந்தோனி—நானும்
எலிப்பிடிக்கிறேன் சிஞ்ஞோரே;
பொத்திப் பொத்திப்பிடி அந்தோனி
பிட்டுப்போட்டோடுது சிஞ்ஞோரே.

'சிஞ்ஞோர்' என்றது 'நயினார்' என்றது போலக் கீழோர் மேலோரை மரியாதையோடு விளிக்கும் போர்த்துக்கீசச் சொல்.

[ இப் பாடல்களுள் பெரும் பகுதியை எழுதியளித்தவர் முள்ளியவளை ஆசிரியை திருமதி செல்லம்மா முத்தையா அவர்கள் ]

பாட்டி குழந்தையைத் தாலாட்டும்பொழுது ... ...

"பச்சை இலுப்பைவெட்டிப் பால்வடியத் தொட்டில்கட்டி
தொட்டிலுமோ பொன்னாலே தொடுகயிறோ முத்தாலே
முத்தளப்பன் செட்டி முடிதரிப்பன் ஆசாரி
ஆசாரி வாசலிலே ஆனைவந்து நிற்குதடா"

... ... என்று ஈற்றுச்சொல் முதலாக வர அந்தாதி முறையிலே பாடுகிறாள்.

# 8 காகமுந் தாகமும்

அண்டங்காகம் அவலச் சகுனத்தை உணர்த்தும். அரிசிக்காகம் தன் கிருவுதலால் கடித வரவையோ, பண வரவையோ, உற்ருர் உறவினர் வரவையோ உணர்த்தும் என்பது சாதாரண நம்பிக்கை. விடியலில் கணவனின் வருகையை எண்ணிக்கொண்டு வெளியே வந்த ஒருத்தி கத்தும் காகத்தைக் கண்டாள். பாடுகிருள்.

1 கத்தாதே காகம், வாசலிலே
கதருதே காகம்,
எத்தாதே காகம், உனக்கு
எறிஞ்சிடுவேன் பொல்லாலே.

2 கத்தாதே காகம்
கதருதே என்வாசலிலே
கரையாதே காகம் - உன்னைக்
கலெச்சிடுவேன் கல்லாலே.

3 கத்தாதே காகம்
கதருதே என்வாசலிலே
ஏய்க்காதே காகம் - உனக்கு
எறிஞ்சிடுவன் கால்முறிய.

4 கத்தாதே காக்காய்
கதருதே என்வாசலிலே
எத்தாதே காக்காய்என்
எசமான்வந்து சேர்ந்திடட்டும்.

[மட்டக்களப்புப் பாடல்கள். தொகுத்து உதவியவர், வெள்ளவத்தை, மு, இராமலிங்கம் அவர்கள்]

# 9 காகமும் சகுனமும்

வேஞரர் இல்லக்கிழத்திக்கு நேர்ந்த அநுபவம் இது. ஒரு காகம் கத்த, பாடுகிருள்.

காகம், இருந்து
  கால்கடுக்க ஏனழுதாய்,
மன்னன் விசளத்தை
  மனங்குளிரச் சொல்லாமல்.

கணவனிடமிருந்து நற்செய்தி கிடைத்தது. அதன் பின்னர் ஒரு காகம் வந்திருந்து கத்த, கூறுகிருள்.

விடியவிடாய் காகம்
  வேலியிலே தங்கிநின்று;
சண்டாளக் காகம்,உன்ரை
  சாத்திரமும் பொய்யாச்சே.

ஒருத்தி முன் ஏமாற்றப்பட்டதினுலும் அதன் குறும்புத் தன்மையினுலும் இப்படிப் பாடுகிருள்.

காக்காச்சி, மூக்காச்சி,
  கறுத்தப் பெண்டாட்டி!
காகிதம் வருமெண்டால்,
  தெத்திக்காட்டு.

இன்ஞெருத்தி காகத்தினைத் தூது அனுப்புகிருள்.

ஒசெர நெடுப்பமில்லை,
  உசந்தமூக்கு, வெள்ளைநிறம்,
கடையிலிருப்பார்; அவரைக்
  கண்டால்வரச் சொல்,காகம்.

[மட்டக்களப்புப் பாடல், உதவியவர் வெள்ளவத்தை மு. இராமலிங்கம் அவர்கள்.]

# 10 காகத் தூது

கட்டிளங்காளை ஒருவன்
தன் கன்னியிடம் காகத்தைத் தூதனுப்புகிறான்

1 கத்திறியே காகம்என்
கண்மணியைக் கண்டாயோ?
சந்தித்துக் கேட்டால், என்றை
சரித்திரத்தைச் சொல்வாயோ?

2 ஊருக்குப் போவாயெண்டால், காகம்என்
ஊர்க்குருவியைக் கண்டுசொல்லு,
கையெடுத்துக் கண்ணில்வைத்து நான்
கடியசலாம் சொன்னேனெண்டு

3 ஆளோடு நிற்பாள்;அதை
அந்நேரஞ் சொல்லாமல்,
தனியாகக் கண்டு,எந்தன்
தவிப்புநிலை சொல்,காகம்.

4 உள்ளதைக் காகம்
ஒளியாமல் சொன்னியெண்டால்,
காசு கொடுத்துநான்
கருவாடு வாங்கித்தாறேன்

கடியசலாம் - இஸ்லாமியர் வழக்கு.

[மன்னார்ப் பாடல்கள். உதவியவர், வெள்ள வத்தை மு. இராமலிங்கம் அவர்கள்.]

# 11 பட்சிகளை வினவுதல்

நாட்டுப்பெண் ஒருத்தி தன் கணவனைப்பற்றி நாக ணவாய் முதலிய பட்சிகளிடம் விசாரிக்கின்ருள்.

1 உயரப் பறக்கும்
ஒருகோடி நங்கணங்காள்!
ஊரைவிட்டுப் போனஎன்ரை
தங்கவண்டைக் கண்டியளோ?

2 உயரப் பறந்துவரும்
ஒருகோடி நங்கணங்காள்!
தாழப் பறவீரோ - மன்னவரின்
சுகசேமங் கேட்டறிய.

3 உயரப் பறக்கும்
ஒருகோடி நங்கணங்காள்!
தாழப் பறவுங்கோ - என்ரை
தன்மைகளைச் சொல்லியழ,

4 ஆகாசக் கொப்பில்
அறையறையாய்க் கூடுகட்டித்
தங்கும் புருக்காள்!என்
தங்கவண்டைக் கண்டீரோ?

5 மாடப் புருவே,
மலைநாட்டு நங்கணமே!
கூடப் பறப்பேன் - உங்க
கூட்டாளிமார் செப்பமில்லை.

6 சோலைக் குயிலே,
தோகைமயில் நங்கணமே!
கூவும்புருவே! அவரைக்
கொண்டுவந்து சேர்த்திடுங்கோ.

[மட்டக்களப்புப் பாடல்கள். உதவியர் வெள்ளவத்தை, மு. இராமலிங்கம் அவர்கள்.]

# 12 பிரிவாற்றுமை

பெற்ருேர் கூட்டாமல் தாமே மனமொத்துக் கூடிய ஆணும் பெண்ணும் பின் பிரிந்தனர். அவள் பாடுகிருள்:

வாயிருந்தால் இந்த
வயதுவந்த புளியமரம்
சொல்லாதோ எந்தன்
துரைசொன்ன உறுதிமொழி.

குறிப்புரை: புளியமரத்தின் கீழேயே களவுப்புணர்ச்சி நடத்தி வந்தார்கள். அப்புளியமரத்தினையே இப்போது சான்று பகரும்படி வேண்டிக்கொள்ளுகின்ருள்.

[மட்டக்களப்புப்பாடல். உதவியவர், வெள்ளவத்தை மு. இராமலிங்கம்.]

மச்சாள் மச்சானுக்கு ... ...

உள்ளான் குருவியிடம் மச்சான்
உள்ளிருக்கும் பித்தெடுத்து
சேர்த்து மருந்தரைத்து உன்னைச்
சேரவைப்பேன் காலடியில்

2 ... ... என்று வசியம் வைக்கிருள்

# 13 துணை தேடுதல்

அகப் பொருளில் இரவுக் குறியினைத் தழுவியன இப்பாடல்கள். ஆயினும் இரவுக் குறியில் பெறப்படாச் சிறப்புக்கள் சிலவற்றை இவற்றிற் காணலாம். காதலனும் காதலியும் ஓரிடத்தை ஒழுங்கு செய்து இரவில் கூடிப் பிரிதல் (Love Nest) இரவுக் குறி

1 கடலே இரையாதே;
கற்கிணறே பொங்காதே;
நிலவே எறியாதே - என்ரை
நீலவண்டாள் போகுமட்டும்.

2 கடலே இரையாதே;
காற்றே நீவீசாதே;
நிலவே எறியாதே - என்ரை
நீலவண்டாள் போகுமட்டும்.

3 காற்றே அடியாதே;
கானலேநீ வீசாதே;
நிலவே எறியாதே - என்ரை
நீலவண்டாள் போகுமட்டும்

4 உயரப் பறக்கும்
ஒருகோடி நங்கணங்காள்
தாழப் பறந்திடுங்கோ - என்ரை
தங்கவண்டாள் போகுமட்டும்

[மட்டக்களப்புப்பாடல்கள்; உதவியவர் வெள்ளவத்தை மு. இராமலிங்கம் அவர்கள்.]

# 14 பிறந்த அகம் போன பெண்

மனைவி தன் மாதா பிதா சகோதரர்களைக் காணப் போய்விட்டாள். அவள் திரும்ப, காலதாமதம் ஆகின்றது. கணவனுக்கோ ஊண் உறக்கமில்லை. அந்த நிலையில் முதலில் கிளிகளை விளிக்கின்றான்.

*1 கூட்டாகச் சேர்ந்து*
*கூவையிட்டுச் செல்லுகின்ற*
*சோட்டுக் கிளியினங்காள் - என்ரை*
*சுந்தரியாள் சேமமென்ன?*

*2 வில்லுக் கரத்தையிலே,*
*வெருட்சியான மாடுகட்டி,*
*பாய்ச்சலிலே போன - என்ரை*
*பசுங்கிளியைக் கண்டீரோ?*

*3 மாந்தோப்புக் குள்ளாலே*
*வந்துமின்னுஞ் சந்திரரே*
*ஏந்திழையாள் என்மனைவி*
*என்னசொன்னாள் உங்களிடம்?*

[மட்டக்களப்புப் பாடல்கள். உதவியவர், வெள்ளவத்தை மு. இராமலிங்கம் அவர்கள்.]

**மச்சான் மச்சாளுக்கு ... ...**

ஆட்டின் பித்தெடுப்பேன் மச்சி —
அந்தரத்தில் மண்எடுப்பேன் — உன்
கொண்டை மயிர்எடுப்பேன் உன்னைக்
கொண்டுவர என் காலடிக்கு

... ... **என்று வசியம் வைக்கிறான்**

# 15 மைத்துனன் மைத்துனி மணம்

இலங்கையிலே இம்முறைக் கல்யாணம் பெருவழக்கு. இதுவே இங்கு வருவது. இது மணப்பெண்ணின் நற்ருய் கூற்று.

*மாமாட்டப் போனீரென்ருல்,*
*மான்கன்றைக் கண்டீரென்ருல்,*
*பூவிருந்து வாடுதென்று - என்ரை*
*பொற்கொடிக்குச் சொல்லிவிடும்.*

குறிப்பு: மாமா இடம் என்பது மாமாட்டை, என்ருயிற்று. பொற்கொடி என்பது தன் மருமகனை.

[மட்டக்களப்புப் பாடல். உதவியவர், வெள்ளவத்தை, மு. இராமலிங்கம் அவர்கள்.]

பிந்தி வந்தவள் ... ...

வாடமுன்னம் வந்தனில்லை — உன்
வன்னமுகம் காண்பதற்கு
சோரமுன்னம் வந்தனில்லை — உன்
சோதிமுகம் காண்பதற்கு

... ... என்று ஒப்பாரி பாடுகிருள்

# 16 புத்தி அறிதல்

உலக வழக்கில் புத்தியறிதல், பக்குவப்படுதல், பிராயப்படுதல் என்று வருவது செந்தமிழ் நடையில் 'பூப்பு எய்துதல்' எனப்படும். தன் மகள் பூப்பெய்திய நற்செய்தியைத் தன் கணவனுக்குத் தெரிவிக்கின்றாள் தாய்.

1 ஆதங்காக்கா, ஆதங்காக்கா
அவரைக்கண்டாற் சொல்லுடுங்கோ-நம்ம
பூவரசம்பூக் கன்னி
பூமலர்ந்து போச்சுதென்று.

2 ஆதங்காக்கா, ஆதங்காக்கா!
அவரைக்கண்டாற் சொல்லிடுங்கோ-நம்ம
மாதாளம் பூவு
மடல்விரிந்து போச்சுதென்று.

மங்கையர் ருதுவானதும் மாங்கல்யம் தரித்தேயாகல் வேண்டும் என்பதும், மாப்பிள்ளை அகப்படாமல் இருந்து விட்டால், அவளின் தாய் தனக்குக் காற்கட்டு உண்டு என்று நினைத்ததுமானகாலம் அது.

புத்தலுக்குப் போறயெண்டால் - என்
பொன்னிவண்ணைக் கண்டாயெண்டால்,
இருகால் விலங்கோடே - சிறை
இருக்கேனெண்டு சொல்லிவிடு.

**குறிப்புரை:** புத்தல் ஓர் ஊரின் பெயர். அங்கே போகின்ற ஒருவனிடம் செய்தி அனுப்புகிறாள் மனைவி தன் மகளுக்குக் கல்யாணம் விரைவில் செய்து வைத்தல் வேண்டுமென்று.

[மட்டக்களப்புப் பாட்ல். உதவியவர், வெள்ளவத்தை மு. இராமலிங்கம் அவர்கள்.]

# 17 யானையின் அட்டுழியம்

கணவனை மன்னனிடம் அனுப்புகிறாள் மனைவி. பாடு பட்டுப் பயிருக்கு நீர் இறைத்துவர, யானை வந்து பயிரை அழித்து வருதலைக் கண்டு மனம் புழுங்கிய மனைவி வேறு என்ன செய்வாள்?

*ஏற்றாலே வேளாண்மை*
*இறைப்பார் ஒருவரின்றி*
*மாட்டால் அழியுதென்று*
*மன்னரிடம் சொல்லிடுகா*

மாடு - யானை, (உலகவழக்கு)

[மட்டக்களப்புப் பாடல். உதவியவர். வெள்ளவத்தை, மு. இராமலிங்கம் அவர்கள்.]

கல்யாணம் ஆகிய அண்மைக் காலத்தில் மனைவியை விட்டுக் கணவன் தன் தொழிலுக்குச் சென்றுவிட்டான். இருவர்க்கும் தனிமை தாங்கமுடியாமலிருக்கிறது. கணவனுக்குத் தன் ஆற்றாமையைச் சொல்லி யனுப்புவது போன்ற பாடல்கள் இவை.

1 *எருக்கலம் பிட்டிக்கு*
*எருவுகொண்டு போறதம்பி!*
*மச்சானைக் கண்டால் - உன்னை*
*மயில்வரட்டாம் என்றுசொல்லு.*

2 *பட்டியடிப் புட்டியிலே*
*பால்கறக்கும் தம்பிமாரே*

*மச்சானைக் கண்டால் - உன்*
*மயில்வரட்டாம் எண்டிடுங்கோ.*

3 *சில்லூறுச் சோலையிலே*
*சிறுவனத்தில் மாடுகட்டி,*
*கண்டுகறப்பார்! அவரைக்*
*கண்டால்வரச் சொல்லிடுங்கோ.*

[மன்னூர்ப் பாடல்கள். உதவியவர், வெள்ளவத்தை மு. இராமலிங்கம் அவர்கள்.]

## வயலிலே கதிர்பொறுக்கும் அழகி

முள்ளிப் பூப்போலே முறப்பட்டுச் சேலையும்
மூலைசாய்ந்த கடகமும் கொண்டு
தள்ளித் தள்ளிக் கதிர்கள் பொறுக்கின்ற
தாடங்கப்பள்ளி நாடங்கக்காரி.

— கதிரையப்பர் பள்ளு

## பாலர்கள் பாடும் நாட்டுப் பாடல்

காக்காய்க் குஞ்சுக்குக் கலியாணம்
காசுக்கு ரெண்டு பணியாரம்
ஓட்டுக்கு மேலே சீதனமாம்
கஞ்சி காய்ச்சடி குஞ்சி
கரணம் போடடி சிங்கி
வந்த மாப்பிளை நொண்டி
வாசலைச் சாத்தடி தெண்டி.

# 18 எண்ணெய்ச் சிந்து

பண்டைக் காலத் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்க்குச் சம்பளமில்லை. அங்கு எரிப்பதற்குஆமணக் கெண்ணெய் தேங்காயெண்ணெய் புனலைக்கொட்டை யெண்ணெய் முதலிய எண்ணெய்களைச் சனிக்கிழமை களில் மாணவர் சேகரிப்பர். அதற்கென்று பாடும் பாடல் இது.

1 சீரார் சனிஎண்ணெய்ச் சிந்துதனை யான்பாட
காராளை மேனிக் கணபதியே முன்னடவாய்.

2 முன்னுளில் ஆகமத்தில் முதுணர்ந்தோர் சொன்னபடி
இந்நாளி லேசிறியேன் எண்ணெய்த் தமிழ்பாட.

3 பாட அறியேன் பயனறியேன் இம்மொழியை
நாடி உரைக்கலுற்றேன் நல்லகவி வாணர்முன்பு.

4 வண்ணத் தமிழ்ப்புலவர் வரைந்துதள்ளிப் போடாமல்
பெண்ணை இடத்தில்வைத்த பிஞ்ஞகனுர் தாள்துணையே.

5 சால நமஸ்கரித்தேன் சரஸ்வதியே உந்தனையும்
வால சரஸ்வதியே வாக்கருள வேணுமம்மா.

6 பொன்னனைய மாதாவே போதரவாய்க் கேட்டருளும்
அன்னையொடு தந்தை அரிய தவமிருந்து.

7 தந்தையரும் நீரும் தயவுகொண்ட நாளையிலே
மைந்தரில்லா வாழ்வு மகிமைகுறை வென்றுணர்ந்து

8 ஆராய்ந்து வேதமதை ஐந்தெழுத்தை நெஞ்சிலுன்னி
நேராத கோயிலெல்லாம் நேர்ந்து தபசுபண்ணி.

9 சோகம் பெரிதாய் துயரடைந்தீ ராதலினுல்
தாகமுட னெங்கள் தம்பிரான் தன்னருளால்

10 எங்கள் ஜெனனம் எடுத்துரைக்கக் கேட்டருள்வீர்
உங்கள் வயிற்றில் உற்பவித்தோம் மாதாவே

11 உற்பவித்த நாள்முதலாய் உங்கள் வருத்தமதை
அற்பமென்று நாங்கள் அறைந்துவிட லாகாது.

12 ஓராம்மா தத்தில் உதிரமது தான்திரண்டு
ஈராம்மா தத்தில் இருவிழியும் வெண்ணிறமாய்

13 மூன்றும்மா தத்தில் முறைமுறையே சோகமதாய்
தோன்றும்வாய் கைப்பாய் துய்யபுளி மேலுவப்பாய்

14 நாலாம்மா தத்தில் நஞ்சுண்ட கெண்டையைப்போல்
மேலும் வெளுவெளுத்து வெள்ளோங்கா ளம்மிகவாய்

15 ஐந்தாம்மா தத்தில் அதிகம் புளிவிரும்பி
மிஞ்சுமுலை கறுத்து மேனியெல்லாம் பச்சுடம்பாய்

16 ஆறும்மா தத்தில் அரைவயிறு சூலாகி
கூறும் மொழிகளெல்லாம் கோபக் குணமாகி

17 ஏழாம்மா தத்தில் ஏப்பிளைப்புத் திட்டுமுட்டாய்
நாளு முறக்கமற்று நல்லோனே தஞ்சமென்று

18 எட்டாம் மாதத்தில் இருந்தெழும்ப மாட்டாமல்
கட்டுகள் விட்டு கடுப்புமிக வுண்டாகி

19 ஒன்பதாம் மாதமதில் உருவெம்பல வாய்மாறி
இன்பமுலை பால்சுரந்து இடுப்புமிக வேகடுப்பாய்

20 மாசமொரு பத்து வருந்தி நிறைந்தபின்பு
வாசற் படிகடக்சு மாட்டாம லேயிருந்தீர்

21 ஓடி மருத்துவிச்சி ஒண்டொடியைத் தானழைத்து
கூடி யுறவோர் குமரவேள் தஞ்சமென்று

22 காலுக் கிருப்பாரும் கைதாங்கி நிற்பாரும்
மேலுக்கு நிற்பாரும் வேதனையோ என்பாரும்

23 கரிமுகவ னைப்போற்றி காளிதனைத் தோத்தரித்து
பரிதாப மென்று பதைத்தே அழுவாரும்

24 இந்தப் படியே இவர்களெல்லாம் நிற்கையிலே
தந்திரமாய்ப் பாலன் தரணிதனி லேயுதித்தான்

25 பன்னீர்க் குடமுடைந்து பாலன் பிறந்திடவே
நன்னீர்மை யாக நயந்துபுகழ்ந் தெல்லோரும்

26 வீண்பிள்ளை யல்லஇது மேதினியி லெங்களுக்கு
ஆண்பிள்ளை என்று அகமகிழ்ந்து கூரைதட்டி

27 அம்மான் அடியளந்து ஆகக் குறிப்பெழுதி
செம்மையுடன் உலக்கை சிரித்தே எறிந்திடுவார்

28 வாயார வாழ்த்தி வரிசையுடன் தானேந்தி
தாயார் மருத்துவிச்சி தவிடுகொண்டு தான்புரட்டி

29 மஞ்சல்நீ ராட்டி மணிமுக்குத் தான்பிடித்து
அஞ்சனம் தீட்டி அலங்காரப் பொட்டுமிட்டு

30 உடுபிடவை தன்னாலே உள்ளீரந் தான்துடைத்து
சடுதியிலே ஏந்தித் தாலாட்டிச் சீராட்டி

31 வேப்பிலை கொண்டு மிகுபுகையுந் தான்காட்டி
காப்பணிந்து நன்மருங்கைக் கனசடங்கு செய்தீரே

32 எங்கெங்கு மோடி இரவற்பால் வாங்கிவந்து
சங்கதனை ஊட்டித் தான்வளர்த்தீர் மாதாவே.

33 கண்ணூறு நாவூறு காற்றணைவு வாராமல் .
வெண்ணீ றதனால் வினைதீர்த்தீர் மாதாவே

34 பன்னிரண்டாம் நாளில் பண்பான தொட்டிலிலே
என்னை வளர்த்தி இறையவனைப் போற்றிசெய்து

35 ஓராட்டித் தாலாட்டி உற்றதொட்டில் தனையாட்டி
சீராட்டி எந்தனையும் சிறப்பாய் வளர்த்தீரே

36 சாணை யுதறித் தந்திரமாய்ப் பாய்போட்டு
பேணி வளர்த்தீரே பேறுபெற வேண்டுமென்று

37 காயம் மருந்து கடைச்சரக்குத் தானருந்தி
ஈயெறும்பு தீண்டாம லெனைவளர்த்தீர் மாதாவே

38 குப்புற வீழ்ந்து குலாவித் தவழ்ந்துவந்து
செப்பமதாய்நடையும் தேர்ந்து பயின்றபின்பு

39 காப்பிட்டு காறையிட்டு காலில் சதங்கையிட்டு
பூப்பட் டுடுத்துப் பொன்னரைஞாண் தான்பூட்டி.

40 அந்திசந்தி நாளும் ஆனபணி தானணிந்து
மைந்த னழகுகண்டு மனமுருகி முத்தமிட்டு

41 எண்ணெய் தடவி இருபெயரு மோர்மனதாய்
கண்ணிமை காப்பதுபோல் காத்தீரே காவலுடன்

42 ஐந்து வயதில் அறிவுணர்த்த வேண்டுமென்று
தந்தையுடன் நீரும் தகைமையுடன் ஓர்மனதாய்

43 பள்ளிக்கு வைக்கப் பருவமிது வென்றறிந்து
வெள்ளிக் கிழமை விடிந்தைந்து நாழிகையில்

44 ஒன்பது கோளும் உறவுசெய்யும் வேளைதனில்
இன்பமுறு பூசைக் கிசைந்தபல மங்களமும்

45 ஓலைதெட் சணைகளுடன் ஓதுவிக்கக் கல்விதரும்
சாலைதனை நாடி சட்டம்பியா ரண்டைசென்று

46 புத்திரர்க்குக் கல்வி புகட்டுவிக்க வேணுமையா
பத்திரமாய்ப் பாருமையா பாலனிவன் தானொருவன்

47 புத்தி பொறுமை புகட்டுவீர் சற்குணங்கள்
அத்தி முகவன் அருளா லிவர்தனையும்

48 கள்ளனாய்ப் போகாமல் காவாலி யாகாமல்
துள்ளி விளையாடி தூர்த்தனாய்ப் போகாமல்

49 மாடாடு மேய்த்து மடையனாய்ப் போகாமல்
நாடோடி என்று நாட்டிலுள்ளோர் சொல்லாமல்

50 சூதாட்ட மாடி சுணைகேட னாகாமல்
வாதாடி வழக்காடி வகைகேட னாகாமல்

51 அறிவிலி என்று ஆரும் நகையாமல்
சிறிய வயதிலிந்தச் சிறுவனைச்சீ ராக்குமையா,

52 என்றுசொல்லிக் கைகூப்பிஇரு தாளிறைஞ்சி நிற்க
நன்றென்று மையர் நலமாய் விடையளித்து

53 வேழ முகத்து விநாயகனைப் பூசைசெய்து
கோழை தெளிந்து கும்பிட்டுச் சரஸ்வதியை

54 ஐயர்குரு ஓலைதனில் அரிவரியைத் தானெழுதி
கையில்தந் தெங்களுக்குக் கற்பித்தார் கல்விதனை

55 அன்றுதொட் டின்றளவும் அன்பான எங்கள்குரு
என்று மொருநாட்போல் இனியமொழி புகட்டி

56 தண்டித்த தண்டனைகள் சாற்ற முடியாது
கண்டிப்பா யவற்றைக் கருத்துடனே சொல்லுகிறோம்.

57 எழுத்துப் பயின்று எழுதி முடிந்தபின்பு
மொழிக்கு எழுத்து முறையாகக் கற்பித்து

58 அரிச்சுவடி யும்பேரும் ஔவையார் பாடல்களும்
உரிச்சொல் நிகண்டும் உண்டான முதுரையும்

59 கந்த ரனுபூதி கந்தரலங் காரமுடன்
அந்தாதி சதகம் அனைத்தும் பயின்றபின்பு

60 புகன்ற பலநூல்கள் பொருளுடனே கற்றதன்றி
அகன்றபல நூல்கள் ஆராய்ந் தறிவதற்கு

61 வாசினை கணிதம் வாசக மிலக்கணமும்
தேசக் கணக்கும் சிறப்பாய்ப் பயிற்றுவித்த

62 நேசக்குரு அவர்கள் நித்தமு மெங்களுக்கு
வாசித்துந் தந்தகடன் வைத்திருக் லாமோஅம்மா

63 பூசித்துப் போற்றி பொற்பாதம் கூப்பிநின்றோம்
வாசித்தோம் தாருமம்மா வாத்தியார் தெட்சணையை

64 அன்னையரே தந்தையரே அக்கையரே தங்கையரே
என்னைப் பயிற்றுவித்த இளங்குருவின் சம்பளத்தை

65 தெண்டனிட் டேன்தாரும் தெட்சணை யாய்க்கொண்டு
வணடமிழோதுவித்த வாத்தியார்முன்வைப்பதற்கு[சென்றுள

66 நாட்டோர் நகைக்க நாட்கழித்துப் போடாதீர்
கேட்டோர் புகழவேண்டும் கிருபையுள்ள மாதாவே.

67 சனிஎண்ணெய்க் காசுவங்தோம் தாயே சலியாதே
இனிஎண்ணெய் இல்லையென்று ஏது முரையாதே

68 வீட்டில்எண்ணெய்தானும் விடுகாசு மில்லையெனில்
கேட்டுக் கடன்வாங்கிக் கிருபையுடன் தந்தனுப்பும்

69 நாடி நடந்து நலிந்தே துயாமுற்று
வாடி மிகநொந்து வருந்துகிறேம் மாதாவே

70 கால்கள் கடுக்குதம்மா கமலமுகம் வாடுதம்மா
மேல்கள் எரிந்து வெயிலில் உருகுதம்மா

71 உச்சி கருகுதம்மா உள்ளங்கால் வேகுதம்மா
மெச்சுமுங்கள் பிள்ளைகளின் மேனி வதங்குதம்மா

72 வேர்த்துச் சொரியுதம்மா வெந்நீர் குளித்தாற்போல்
பார்த்திருக்க லாமோ பாலர் படும்துயரம்

73 தண்ணீர் தவிக்குதம்மா தாகம் வருகுதம்மா
கண்ணீர் சொரியுதம்மா கண்ணனைய மாதாவே

74 மெத்தப் பசிக்குதம்மா வீண்பொழுது போகுதம்மா
பத்தினியோ நீங்களுந்தான் பார்த்து மிருப்பீரோ

75 ஈனு மலடிகளோ இரக்கமிலாத் தாய்மாரோ
ஆனாலும் தாயே அனுப்பிவிடு மெங்களையும்

76 ஓதுவித்த கூலி ஒருகாசு நின்ருலும்
பாதிவித்தை தானும் பலியாது மாதாவே

77 பாக்கு வெற்றிலையும் பழமும்தேங் காயுமெங்கள்
சாக்கு நிறையத் தந்தனுப்பும் தாய்மாரே

78 எங்கள்குரு வானவர்தான் இம்மட்டும் பார்த்திருந்து
வெங்கண் சிவக்க வெகுகோபம் கொண்டிருப்பார்

79 பாடம் படித்துப் பழம்பாடம் ஒப்புவிக்க
ஓடிவரச் சொன்ன உபாத்தியார்க் கென்னசொல்வோம்

80 விடிந்தைந்து நாழிகையில் வெளிப்படா தேயிருந்தால்
நெடிய பிரம்பெடுத்து நீட்டி யடித்திடுவார்

81 சட்டம்பி துட்டரவர் சற்று மிரக்கமிலாா
கிட்ட வரச்சொல்லி கிள்ளிடுவார் காதினிலே

82 நெற்றியிற் கல்வைத்து நேர்கதிரோன் முன்னிறுத்தி
சுற்றி யடிப்பார் சுழன்றிடுவோம் தாய்மாரே

83 கூட்டோடே பொல்லாக் கொடிய முயிறுதன்னை
பாட்டுப் பிழைஎன்றால் பதைபதைக்கப் போட்டிடுவார்

84 கோதண்டம் தன்னிலே கொண்டுபோய்த் தூக்குமென்பார்
ஆதண்டம் போட்டு அநியாயம் செய்திடுவார்

85 நாங்கள் படும்துயரம் நன்றியுள்ள மாதாவே
நீங்கள் கண்டிருந்தால் நிலத்தில் விழுந்தழுவீர்

86 பெற்றவர்க்கல் லோதெரியும் பிள்ளை வருத்தமது
மற்ற மலடிஅந்த வருத்த மறிவாளோ

87 தன்மம் மிகப்பெருகச் சந்ததிக ளீடேற
கன்ம வினையகற்ற காளைகளாய் நாம்பிறந்தோம்

88 ஈதல்லால் உங்களுக்கு இன்னமொன்று சொல்லுகிறோம்
பூதலத்தை நம்பிப் புகழ்ந்து மனமகிழ்ந்து

89 தீதற்ற செல்வம் சிறப்பாய் மிகப்பெறினும்
காதற்ற ஊசி கடைவழிக்கும் வாராது

90 ஆகையால் நீங்கள் அறிவுடைய மாதாவே
போகவழிதேடி புறப்பட் டிருக்கை நன்று

91 சீரார் சனிஎண்ணெய்ச் சிந்து மிகவாழி
ஆராய்வோர் கேட்போர் அறைவோர் மிகவாழி

92 பாடினோர் வாழி படிப்பித்தோர் தான்வாழி
கூடினோர் வாழி குருபாதம் தான்வாழி

93 ஆல்போற் றழைத்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கில்போல் சுற்றம் முசியாமல் வாழியவே.

[இந்தச் சிந்து நவாலியூர் உ. ந. தேவகடாட்சம் அவர்கள் உதவியது.]

# 19 கப்பற் பாட்டு

அஞ்சாமல் நின்றபனை மீன்வருகு தோபார்
ஆரைமீன் தன்குஞ்சை நாடிவருகு தோபார்
மிஞ்சியே வாடையோ, கோடையோ வீசுது
விஜயமலி ஆரூர்க் கரைகண்டு ஓடுது
மஞ்சுசூழ் தருவேத வதனமதோ தோன்றுது
வயவீர கத்தியார்க் குடையடா தேங்காய்
கஞ்சநிறை செந்தியம் பதியில்வந் ததுவே
கப்பலின் பாயைஎடு தள்ளடாநங் கூரம்
ஏலேலோ, ஏலலோ, ஏலேலோ ... ... ...

**இராகமேற்றிவரும் கப்பலின் செய்யுள்**

நாகரிக முள்ளதொரு நாட்டை யலங்காரம்
நயம்பெற்ற காம்போதி கனம்மெத்தப் பேசும்
கன்னடா காபிநான் என்னடா சொல்வேன்
நவரோஸ், ச்பைஅலங் காரசா வேரி
ஜாதக முள்ளசவு ராட்டிக முகாரி
கெர்ச்சிக்கும் மேகம்போல் கேதார கௌளை
ஆதார முள்ளதொரு பூபாள இராகம்
கெடிமுழங்க ரவிபேசு தேசிக தோடி
ஆர்க்குவெகு வாகவரு அசாவேரி இராகம்
மானுபி மானமாய்த் தாளலயம் போட
பத்திரச முண்டாகு மத்திமா பதியும்
தாகமுள்ள பேர்க்குப்பசி தீர்க்குமோ கனமே
சுத்தசா வேரிஇது சுத்தமுள்ள இராகம்

சங்கரனைத் துதிசெய்யும் சங்கரா பரணம்
காளிங்க நட்டனமொடு மோடியுடன் கூடி
நாக வராளி, புன் னாக வராளி
சோக வராளி, சுத்தபந்து வராளி
இந்துவித மாகவரு பஞ்ச வராளி
இசைக்கவரு நயம்பேசு எதுகுலகாம் போதி,
அடாணு தனுசரி ஆரவி கௌளை
இன்னும்சில அபூருவ இராகங்கள் ஏற்றி
பின்னாலே சொன்னபடி வருகுதம்மா கப்பல்
ஏலேலோ, ஏலேலோ, ஏலேலோ, ஏலோம் ....

[ இப்பாடல் சரவணையூர் முருகப்பர் சின்னையா அவர்கள் உதவியது ]

**தன் துணைவனை இழந்த ஒருத்தி ... ...**

கண்டியிலே காற்றடிக்க
கைவிளக்கோ நூந்ததென்ன

பால்காய்ச்சும் சட்டியிலே
பாசி படர்ந்ததென்ன.

பல்லுப் பவுண்பெறுமே—உன்
பற்காவி பொன்பெறுமே.

... ... **என்று துயர்க்கவி பாடுகிறாள்.**

# 20 ஒரு கூட்டம் ஆண்களும் பெண்களும்

ஆண்கள் தோட்டங்களிலே வேலைசெய்துகொண்டு நின்றனர். பெண்கள் வரிசையைக் கண்டதும் ஒரு ஆனந்தம் உள்ளூரக் கிளுகிளுத்தது.

வரிசையின் முதலில் ஒரு வாயாடிப்பெண் தனது மச்சானைக் கேலிசெய்யவேண்டும் என்று எண்ணினாள். மச்சான் கறுவல்தான். தானும் கறுப்பி என்பதைக் கூட அவள் மறந்து,

*நாவற் பழம் போலே*
*நனைந்த தணல் போலே*
*காக இறகுபோலே — மச்சான்*
*கடுங்கறுப்புக் கொண்டதென்ன?*

என்று பாட அவன்,

*ஈச்சம் பழம் போலே*
*இடை சிறுத்த பெண்ணுளுக்கு*
*நாவற் பழம் போலே*
*நான் கறுவல் ஆகாதோ?*

என்றான். பின் இன்னொருத்தி,

*மாமி யட புள்ளே*
*மகிழம்பூ வாயுடையாள்*
*பெருக்கப் பெருக்க என்னோடு*
*பேசமனத் தாப மென்ன?*

என்றாள். வேறொருத்தி,

பத்து வயது மச்சான், இப்போ
பருவமில்லே உந்தனுக்கு
சித்தமானல் வந்துமச்சான்
சேர்ந்திடுவாய் என்றேடே

என்று பாடினுள்.

பொன்னும் இரும்பும்
பொதுவான வெண்கலமும்
எல்லாம் விலே போயிற்று - என்றன்
இளேயாள் விலே போகவில்லே.

என்று தன் வீட்டு நடப்புகளே இழுத்துப் பாடினுள் ஒருத்தி. அவள் ஒருவன்மீது கண்வைத்திருந்தாள்.

புல்லும் பிடுங்கி யிருக்கு
புறவளவும் தூர்ந்திருக்கு
நெல்லும் பொரிச்சிருக்கு — எந்தன்
நின்றமச்சான் வருவ ரென்று.

இப்படி நாணிக் கோணிச் சொல்லிவிட்டு மெல்ல நகர்ந்தாள்.

விரல் நிறைய மோதிரங்களே அடுக்கிக்கொண்டு வேருெருத்தி வந்தாள். அவள் கொஞ்சம் பெரிய இடத்துப் பெண்; செல்வாக்குடையவள்.

காட்டில் கடுகுநாவல்
கண்ணிகட்டிப் பூத்ததுபோல்
கையிலுள்ள மோதிரங்கள்
கனத்திஞல் செப்பமில்லே.

என்ருன் அவளுடைய மச்சான். இதுகேட்டு, எள்ளுங் கொள்ளும் வெடிக்கும் அவள் முகத்திலிருந்து,

நெல்லுக் கதிரும் மச்சான்
நெருங்கி விளைஞ்சதுபோல் - உன்
கன்னத்து மீசையது
கனத்ததினுல் செப்பமில்லை,

என்று பதில் வந்தது.

விவாகம் பேசிப் பேசிக் குழம்பிக்கொண்டே யிருக்கும் ஒரு சோடி சந்தித்தார்கள். இவளைக் கண்டதும், அவன்,

சாமம் அடுத்துத்
தலைக்கோழி கூவையிலே
சந்திக்க நான்வந்தால்
சம்மதமா கண்மணியே

என்ருன் கலியாணத்தைக் குழப்பி வந்த அவளது மச்சான். அவள் கண்களில் கோபக்கனல் பறக்க, தன்னைத் தவிக்கச் செய்வதுமல்லாமல் கேலியுமோ என்று

வேட்டைக் கிடாவோ
வேலியில்லா ஓர்பயிரோ
தருமக்கிணறே மச்சான் - உன்
சங்கதிக்கு நான்இணங்க

என்று சுடச்சுடப் பதில் கொடுத்தாள்.

பெற்ருேரிடை ஏற்பட்ட பெரும்பிளவு காரணமாக விவாகம் நடவாது போயிற்று. மச்சாள் வேருெருவனை விவாகஞ் செய்துவிட்டாள். ஒருநாள் அவளைக்கண்ட மச்சான்,

ஐந்து வயதிலே
அறியாத நாளையிலே ।
கொஞ்சி வளர்த்த
குழந்தைபறி போனதடா

கறுத்தக் கரும்பிலே
    கண்போட்டு என்னசெய்ய-இனிச்
சப்பி எறிந்த
    சக்கைதான் இன்பமில்லை.

கறுத்தக் கரும்பே
    கருங்காலிப் பெட்டகமே-உன்னைக்
கொஞ்சாத வஞ்சம்என்
    நெஞ்சைவிட்டுப் போகுதில்லை

என்கிருன்.

முன்னே அன்புடன் புழங்கிய தன் காதலி இப்போது தன்னைப் பாராது செல்வதைக்கண்ட ஒருவன் பாடுகிருன்.

கட்டிக் கறந்தநாகு
    கணுவடிக்கு வந்தநாகு
தட்டிச் சொறிந்தநாகு - அது
    தலையெடுத்துப் பார்க்குதில்லை

இரவில் வந்த தன் காதலனைக் கண்டதும் ஒருத்தி கேட்கிருள். அவன் விடைகூறுகிருன்.

ஆளை மதிக்கேன்என்ரு
    அடியறிய மாட்டேனென்ரு
இரவுசரி சாமமெல்லாம்
    என்கதவில் நீஅடித்தாய்

அவன்,

காலால் நடந்துவந்து
    கதவடியில் பதுங்கிநின்று
மண்ணுல் எறிந்தேனே - உன்ரை
    மனதறிய வேணுமென்று

என்று பாடினுன். உடனே அவள்,

கல்லால் எறிந்துவிட்டால்
கண்டித்தான் போகுமென்று
மண்ணுல் எறிஞ்சு,மச்சான்
மதனிமுறை கொண்டாயோ

என்ருள். அவன் அதற்கு விடையாக

தோலால் சதிரமென்று
நான்இருந்தேன் தோகையரே!
பொன்ஞல் சதிரமென்று,
நான்அறியேன் பூவையரே!

என்று முற்றுப்புள்ளி பொறித்தான்.

[இப்பாடலை உதவியவர் அளவெட்டி ஆசிரியர் சி. பொன்னம்பலம் அவர்கள்.]

**தாலாட்டிலே ... ...**

ஆச்சியம்மான் வாசலிலே
ஆனைவந்து நிற்குதையா
ஆனைக்குஎய்ய அம்புக்கழுகிறீரோ

குட்டியம்மான் கொல்லையிலே
குதிரைவந்து நிற்குதையா
குதிரைக்கடிக்கக் கோலுக்கழுகிறீரோ.

... ... **நாட்டுப் பாடல்.**

# 21 ஒப்பாரி

பண்ணிசை தப்பாது பாடியழுகின்ற மரபு தமிழ்ப் பெண்கட்கேயுரிய சிறப்பு. ஒப்பாரிகளின் அழகிய தொகுப்பொன்று சிறந்த விளக்கத்துடன் நாட்டுப்பாடற் கலைஞர் மு. இராமலிங்கம் அவர்கள் அண்மையில் வெளியிட்டார்கள். இன்னும் சில ஒப்பாரிக் கண்ணிகள் இதோ!

குதிரைமணி கேட்டவுடன் — உங்களுக்கு
குளிக்கவெந்நீர் வைத்திடுவேன்
ஆனைமணி கேட்டவுடன் — நான்
ஆக்கஉலை வைத்திடுவேன்.

பூத்த சுடலையையா — உங்களுக்கு
புதுச்சுடலை தான்காவல்
அத்திச் சுடலையையா — உங்களுக்கு
அருஞ்சுடலை தான்காவல்

போன வழியறியேன் — நீங்கள்
போய்ப்புகுந்த காடறியேன்
பூமியெல்லாம் சுற்றவென்று
போனீரோ என்துரையே

நித்தம் நடந்தவழி — இங்கு
நெருஞ்சி வளருதையா
பலநாள் நடந்தவழி — இங்கு
பாசி படருதையா

நினைப்பேன் திடுக்கிடுவேன் — உங்கள்
நினைவுவந்த நேரமெல்லாம்

பாயில் படுக்கவில்லை — ஒரு
பத்துநாட் செல்லவில்லை
சீனச் சுருளோலை — உங்களுக்குச்
சீக்கிரமாய் வந்ததென்ன?

வேலி அடைப்பதுயார் — இனி
வேளாண்மை செய்கிறதார்
வேளாண்மை செய்தாலும் — அது
வெண்சாவி வீசிடுமே

முத்துக் கிணற்றடியில் — நீங்கள்
முகங்கழுவப் போனடத்தில்
முத்துச் சறுக்கினதோ — உங்கள்
முகத்திஞெளி மங்கினதோ

கல்லுக் கிணற்றடியில் — நீங்கள்
காலலம்பப் போனடத்தில்
கல்லுச் சறுக்கினதோ — உங்கள்
காலிஞெளி மங்கினதோ

[நாயன்மார்கட்டு கா. இரகுநாதன் அவர்கள் உதவியது]

"பாட்டின் சுவையும் பழங்கலையின் பண்புமிவை
நாட்டினுயி ரென்றே நவில்"

# 22 கோடும்பாவி இழுத்தல்

வானம் வரண்டு மழை பொய்த்தால் ஊரிலே ஒரு கொடும்பாவிப்பெண் இருப்பதே காரணமென்று கிராம மக்கள் ஒரு பெண்ணுருச் செய்து இந்த ஒப்பாரியைப் பாடி சுடலையில் அதனை எரிப்பதைக் கொடும்பாவி கட்டியிழுப்பது என்பர். இது இன்றும் கிராமங்களில் இடையிடையே நடக்கின்றது.

"மாதர் கற்புடை மங்கையர்க்கோர்மழை"

என்றும்,

"நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை"

என்றும்,

"தெய்வம் தொழாஅள் கொழுநற்
[றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்றும் வரும் செய்யுள்களை இதனுடன் ஒப்ப நோக்குதல் பொருத்தமாகும்.

கொடும்பாவி சாகாளோ
கோடிமழை பெய்யாதோ

மாபாவி சாகாளோ
மாரிமழை பெய்யாதோ

வானம் கறுக்குதில்லை
மழையுமோ தானுமில்லை

வட்டிப் பணமெடுத்து
வயலை உழுதுவைத்தோம்

சீரான மழையுமில்லை
செந்நெல் விளைவுமில்லை

புழுதிதான் போட்டல்லவோ
புழுங்கலாய்ப் போச்சுதென்று

எட்டுத்திட்டை மாவிடித்து
பிட்டவிக்கத் தண்ணீரில்லை

தெம்பல் உழக்கியல்லோ
சேருடி நெல்லுநட

செழித்தமழை யில்லாமல்
சேதம் பலவாச்சு

நாற்றோ அலசிநட
நல்லமழை தானுமில்லை

களையோ பிடுங்கவில்லை
கால்மறைந்த தண்ணிரிலே

கெட்ட கொடும்பாவி
கேடுகெட்ட மாபாவி

கொடும்பாவி சாகாளோ
கோடிமழை பெய்யாதோ

[கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவன் பா. ஞானபாஸ்கரன் உதவியது]

"செந்தமிழர் தொன்மை சிதைந்த கலைகளினுல் வந்து விளங்கும் வளர்ந்து"

# 23 அருவி வெட்டுப் பாடல்

## பன்றிப் பள்ளு

அருவி வெட்டுக் காலத்திலே ஒருவர் வரம்பிலே நின்று அருவிவெட்டும் பாடலை இசையாகத் தாளத்துடன் பாட வேறொருவர் அதற்கேற்ப மிருதங்கம் முழக்க பலர் அரிவாளுடன்வயலிலேநின்று தாளத்துக்கேற்பப் பாய்ந்து பாய்ந்து விரைவாக அருவிவெட்டுவர்! இந்த வேகமான அருவிவெட்டினை ''பரத்தை'' வெட்டென அழைப்பர். இந்தப் பாடல்களுள் இந்தப் பன்றிப் பள்ளும் ஒன்று. ஆரம்பத்திலே பரத்தை வெட்டுச் சிறப்பாக நடக்க வேண்டுமென்று தெய்வ வணக்கம் நிகழ்கிறது.

காப்பு

சீரான பண்டிசுட் டானிலே உறையும்
செல்வனே குளக்கட்டில் உய்யு மைங்கரனே
பேராக வேயுமது பெருமைபுகழ் கூற
பிழைபொறுத் தருளுவாய் பேழைவயி றோனே
அம்பொற் தடங்கிரியில் பாரதந் தன்னை
அழகுபெற வேஎழுதும் ஆனைமா முகனே
உம்பர்க்கு மெட்டாத ஒருமருப் பவனே
உலகுபதி னாலையும் ஒன்றாக நினைவாய்
தம்பிக்கு வந்துதவும் தும்பிக்கை யோனே

பையரவ நாதரே படைஐய னாரே
பாதாள வைரவ ருடன்பூத ராயரே
துய்யபுக ழாளராம் வீரபத் திரரே
பொங்குபுளி மரநிழலில் அன்புட னுறைந்த
புதுமைசெறி யும்சூல வயிரவரும் நீயே
வற்றாத வாவிதனில் வந்துறைந் தாயே
வயிரவ சுவாமியென வருதம்பி ரானே
சற்குரு தல்தபசு தப்பாத நீயே

தம்பட்டம் சல்லாரி தாளமுள்ள நீயே
பூலோகம் வாழபுலோப் பழையுறைந் தாயே
புதுமைசெறி தும்பளேயில் வயிரவரும் நீயே
மடக்கியே மனிதர்களே முறிப்பதுவும் நீயே
மறைக்கிடாய் பலியெடுத் துண்பதுவும் நீயே
ஆழிசூழ் உலகுதனே ஆளுவதும் நீயே
அண்டசுர ஊேப்பிளந் துண்பதுவும் நீயே
காளியுட னேகணே தொடுப்பதுவும் நீயே
கருத்தாக விற்பிடித் தாடுவதும் நீயே
உள்ளறைப் பிணத்தைஉயி ராக்குவதும் நீயே
உன்னேயல் லாலுலகில் வேருெருவர் இல்லே
தித்திமிதி திமிதிமியென் ருடுவதும் நீயே
கோட்டையடி தன்னிலே வந்துநின் ருயே
கொடுமுடிகள் சிதறஅடி கொட்டிநின் ருயே
உற்சாக மாகவே குதிரைமேற் கொண்டு
உலகுபதி ஞலேயும் ஒன்ருக்கி நின்ருய்
சட்டையிடு தொப்பியிடு காரரெல் லாரையும்
தயங்காம லேபலி யெடுத்துவந் தாயே
காட்டை வெட்டிக் கட்டையது புரட்டி
கனத்ததோர் மண்வெட்டி கைதனில் எடுத்து
மாடுவிட் டேர்உழுது வன்னெல் விதைவிதைத்து
வருந்தியே மானுடர்கள் வயிறது வளர்க்க
கேடு கெட்டபன்றி விளேவதைத் தானழிக்க
கிருபை யோவலிய நரசிங்க நாயகமே
நாடுகெட் டாலது நல்லதோ உனக்கு
நாயனே வலியநர சிங்க நாயகமே
கொத்தியொரு மண்வெட்டி யால்விதை விதைத்து
குடில்களும் வைத்தங்கே காவலும் காத்து
அத்திகரி வந்துபயிர் தன்னேயு மழித்து
ஆளேயும் போடவென் றணுகிவரு கையிலே
நித்திரையோ டாவென்று தட்டி யெழுப்பி
நீபிழைத் தோடென்று கரைசேர விட்டாய்

அங்க நாயக்கடவை தங்குகண் ணகையே
உய்யவரும் அன்னையே உலகமா தாவே
உன்னையல் லாலுலகில் வேறொருவ ரில்லை
அங்கநா மக்கடவை தங்கிவந் ததும்மெய்
அன்புசெறி கோவலர்க் கமுதளித் ததுவும்மெய்
தேத்தா மரமாம் சிறுசோலை வாவியாம்
சேயிழையே உந்த னடைக்கலம் தாயே
பொன்னே மணியே புருட ராகமே
பொதுவர்குல நாயகியே பொற்றொடித் தாயே
அன்னையே தவமே அறத்தின து பயனே
அடைந்தெனக் குதவியருள் ஆருயிர்த் துணையே
மின்னுருன் இன்னிடைக் கண்ணகை யென்கின்ற
மெல்லியலே உந்தன் அடைக்கலம் தாயே

### பன்றிகளின் வருகை

அந்தியும் சந்தியு மறிந்தே-அதில்
விந்தைகள் விந்தைகள் புரிந்தே
பந்துகள் போலவே யுருண்ட-தனிப்
பன்றியு மோடிவந் ததுவே

காலையும் மாலையும் பார்த்து-கரு
மேகம்போ லேகினை கூட்டி
பாலரும் தாய்களு மாகத்-தனிப்
பன்றியு மோடிவந் ததுவே

குட்டியும் தாய்களு மாகக்-குறங்
கொள்ளிபோல் கால்களும் நோக
ஒட்டி மறைந்துநின் றேதாம்-உல்லாசப்
பன்றியு மோடிவந் ததுவே

நாலுகால் சத்தமு மடக்கி-நாய்க்
குட்டிபோல் மேனியை ஒடுக்கி
கூழைவால் கொள்ளியை மினுக்கி-பன்றி
கூட்டத்தோ டோடிவந் ததுவே

மூன்று முழத்துக்குள் வைத்த-ஆமை
முட்டையைச் சோதிக்கும் விந்தை
தோண்டி யருந்திய சொத்தை-உடன்
சூட்சமாய்ப் பன்றிவந் ததுவே

பீரங்கிச் சொத்தையைக் கொண்டே-மண்ணைப்
பேர்த்திடும் வல்லமை கொணடு
ஆரம்பி யாமலே நின்றே-ஆள்
பார்த்துப் பன்றிவந் ததுவே

நண்டுகள் குஞ்சுகள் போலே-நல்ல
பெண்டுகள் பிள்ளைகள் கூட
பண்டுள்ள பேர்களும் சூழத்-தனிப்
பன்றியு மோடிவந் ததுவே

பொத்திக்கட் டிப்போட்ட பறிபோல்-பெரும்
பூசனிக் காய்போல வயிறும்
பத்துக்கட் டிப்போட்ட பொதிபோல்-தனிப்
பன்றியு மோடிவந் ததுவே.

**பன்றி தன் மனைவி கண்ட கனவை யுரைக்கின்றது. கனவின் பேருகவே நெல்லுத் தின்ன வருகின்றதாம் தன் குடும்பத்துடன்.**

வனத்தை யறுத்து நெருப்பைக் கொழுத்தி
மரத்தில் தடிகள் பொறுக்கியே

வளைத்து வேலி நிரைத்துக் கறுத்த
வளநெல் பயிர்கள் தூவியே

புனத்தில் வளரும் கரிகன் றுடனே
புள்ளி மான்பல சாதிக்கும்

பிரித்துப் பிரித்துக் கொடுத்து மிஞ்சிய
பொருள்கொண் டேகும் மனிதரே

இனத்தில் பெரிய சாதி நாங்கள்
பொறுக்க வகையில் லாமலே

எவர்க்கும் பெருமை கொடுக்கும் செந்நெல்
விளைவு தரைக்குள் ஏகினேம்

கனக்க விளைவிங் கிருக்கும் செய்தி
ஒருத்தரும் எமக் குரைத்திடார்

கன்னி துயிலில் கண்ட கனவை
கழறக் கேளும் மனிதரே

நானும் நம்ம பெண்டிலும் பிள்ளையும்
நடு வனத்திலே திரியக்கே

வானி லிருந்து மழைகள் பொழிய
மாரி வெள்ளம் பாயவும்

வாழைக் கனியும் பாலைப் பழமும்
வருந்தி யருந்தித் தின்னவும்

கானி லிருந்து குயிலும் மயிலும்
கலந்தே ஊஞ்சல் பாடவும்

காட்டில் கிளியும் கூட்டில் புறவும்
கடிபட் டேசல் பாடவும்

தேனில் இனிய மனைவி கண்டு
திடுக்கிட் டெழும்பி என்னிடம்

செப்பிடப் பொருள் தேர்ந்து யான்
தேவி யாரிடம் கூறுவேன்

கன்னல் தழையும் செந்நெல் விளையும்
கால மென்றறி யாயோடி

காட்டில் பிழைப்பைப் போட்டு மானிடர்
நாட்டிற் சென்றிட லாமடி

மண்ணில் எனது கண்ணிற் கினிய
மக்களைத் துரந் தழையடி

வல்ல பயிர்கள் செந்நெல் வயலில்
சேர்ந் தருந்திட லாமடி

பன்னு மடியும் நுனியும் பருத்த
பனை மரம்போல் அழகியார்

பாவை நம தாசைக் கியைந்த
பருத்த உரல்போல் இடையினள்

சொன்ன படியே நம்முடன் நமைச்
சூழ்ந்த பன்றிகள் யாவரும்

சுறுக்குள் விளைவு தறைக்குள் வந்தோம்
துரத்த வேண்டாம் மனிதரே.

**பிள்ளைப்பாசம் கொண்ட பன்றி தன் குட்டிகள் நெல்லுத் தின்னும்போது கொடியமனுடரால் கொல்லப்படாமல் தப்பவழி கூறுகின்றது.**

நாடியே ஒரு பிள்ளையில் லாமலே
நாள் முழுவதும் தவங்கள் புரிந்து
தேடியே எங்கள் சிவலிங்கப் பிள்ளையார்
சிந்தைகூர்ந்திந்த மைந்தரைத் தந்தார்

காட்டி லோடிவினை யாடுமாப் போல்
இடத்திலே நீங்கள் போகவும் வேண்டாம்
நாட்டில் மானுடர் செய்திடும் செந்நெல்லை
நாளும் தின்னக் கிடையா தென்மக்காள்

தாயை விட்டுப் பிரியவும் வேண்டாம்
தனியேதூரத் தகலவும் வேண்டாம்
வேசை மக்கள் உலாவியே வந்தால்
வெருட்டுவார் ஓடித் தப்பவும் மாட்டீர்

ஒட்டும் கட்டையு மாகத் துரத்துவான்
ஊண்டிச் சூழினுல் ஊட்டி முறிப்பான்
குட்டி யென்று மனமிரங் கான்குறங்
கொள்ளி யால்உயிர் கொல்லுவான் மக்காள்

பெற்ற தாய்க்கும் பிதாவுக்கு மல்லால்
பிள்ளைச் செல்வம் பிறர்அறி வாரோ
உற்ற தோர்எலி தன்விளை யாட்டில்
உறங்கும் பூனைக் குவப்பில்லைக் கண்டாய்

தாங்கொ ணுத பசியின் துயரால்
தழைக்குஞ் செந்நெல் தரைக்குள்ளே வந்தோம்
எங்கும் புண்கொண்ட எருதின் துயரத்தை
இரங்கு மோசொல் அருந்திய காகம்

தின்னும் உங்கள் பசியின் துயரால்
இங்கு மாணிடர் கைவச மாஞல்
யாம்பின் வாயி லகப்பட்ட தேரையை
பறிக்க லாகுமோ கூறுங்கள் மக்காள்

தூர வீதினில் காட்டினில் உம்மை
துரந்து நீங்க ளடர்ந்துநின் ருலும்
பார மாய்உம்மைப் பெற்ற வயிறு
பதைத்து நெஞ்சம் தரிக்குமோ மக்காள்

எங்கள் தன்னை வளர்த்த தகப்பனும்
ஈன்ற தாயும் இறந்ததின் பின்ஞல்
வந்து காண்பது முண்டோநீர் மாண்டால்
பேந்து வந்து மனத்துயர் மாறுமோ

கொல்லை யெங்கும் குதித்திடிற் காலின்
குளம்பு நோகும் குழந்தைகள் நீங்கள்
சொல்லும் வார்த்தையைக் கேட்டெங்க ளோடே
துரந்துசெந்நெல் அருந்திடு வீரே.

**தன் குட்டிகளுக்கு நன்னிநன்னித் தின்னும்படி புத்தி கூறும்பன்றி காவற்காரன் வருகிறதையும் எச்சரிக்கிறது.**

என்னைத் தொடர்ந்து வந்து
செந்நெல் கதிர்தன்னைத் தேடி
சேறும் பாடு மாயுழக்கி
தின்னுங்கோ மக்காள்.

வஞ்சக மில்லா தருந்தி
மடக்கி முறித்தே உங்கள்
வயிற்றின்கீழ் போட் டுழக்கி
வாருங்கோ மக்காள்

தண்ணீர் சுரியென் றெண்ணுமல்
தாறு மாற தாய்உழக்கி
பண்ணும் வயலில் பசி
யாறுங்கோ மக்காள்

தேடித் தேடித் திரிந்தாலும்
உங்கள் பசி தீராது
ஓரிடத்தில் நின் றுழக்கி
தின்னுங்கோ மக்காள்

சொல்லிச் சொல்லித் திரிந்தீரே
நெல்லுத் தின்ன வேணுமென்று
சோட்டைதீர நீங்கள் நின்று
தின்னுங்கோ மக்காள்

நெல்லுத் தின்னும் ஆசையாலே
பல்லுக் கில்லுப் போர்த்திடாமல்
நின்றுகொண்டு நன்னி நன்னி
தின்னுங்கோ மக்காள்

உண்ணத் தின்ன இல்லாமல்
வன்னத் தொந்தி வாட்டம்கொண்டு
உன்னுணை யென் கண்உறக்கம்
இல்லையென் மக்காள்

கள்ளத் தனம் பண்ணுமலே
மெள்ளத்தசை துன்னத் துன்ன
தொண்டை மட்டும் நீங்கள்நின்று
தின்னுங்கோ மக்காள்

கண்ணுலே பார்த்துப் பார்த்து
காதாலே கேட்டுக் கொண்டு
கச்சைச்சூள் காரன் வரான்
தின்னுங்கோ மக்காள்

பன்றி நெல்லைத் தின்னுமென்று
பாரச்சூள் காரன் வாருன்
பார்த்துப் பதுங்கி நின்று
ஓடுங்கோ மக்காள்

வாருன் உலாத்துக் காரன்
வந்த வழிதன்னை விட்டு
வாருங்கோ முள்வேலிக் கப்பால்
ஓடுங்கோ மக்காள்

ஓடிப்போவம் என்று சொல்லி
தூரத்தில் நீர்போக வேண்டாம்
ஓரிடத்தில் நின் றவனைப்
பாருங்கோ மக்காள்

புறங்காட்டிப் போற போது
திறங்காட்டிச் சென்று நீங்கள்

பின்னே முன்னே பாராமலே
　　தின்னுங்கோ மக்காள்

மானிடவன் செய்த செய்கை
　　யாவருக்கும் பங்க தாகும்
வன்னிமையில் லாமல் நீங்கள
　　தின்னுங்கோ மக்காள்

பொழுது விடியு தாக்கும்
　　பூமி வெளிப்பாகு திங்கே
பேசாமல் வேலிக் கப்பால்
　　ஓடுங்கோ மக்காள்

பற்றைக் குள்ளே போய்க்கிடந்து
　　வெப்ப வெய்யில் சாயுமட்டும்
பாங்குடனே போய் மறைந்து
　　தூங்குங்கோ மக்காள்.

[இப்பாடல்கள் உடுத்துறை வடக்கு திரு.ச. கணபதிப்பிள்ளை அவர்கள் உதவியது].

**கதிரையப்பர் பள்ளிலே ... ...**

''மாவலிகங்கை ஆறுபெருகி வாறதுபாரும் பள்ளரே
குண்டந்திருக்கை குறவைசாளை கொடுவாளுளுவை கும்பிளா
குறவைமணலை பிறையன்நகரை குழுமுரல்கடல் மறிபன்னு
கெண்டைபறவை காலைபாரை சுறுவிளைமீன் கடல்விரால்
அரும்புநெத்தலி கெளுத்தல்கத்தலை தும்பைஓரா வஞ்சூரன்
கொண்டைத்திருக்கை திரளிவாளை கீளிகாரல் பாலைமீன்''

... ... என்று மாவலிகங்கையில் ஓடும் மீன்களின் நாமாவலி வருகிறது.